2014 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 316, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

316—

மின்மாற்றி

***41716—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, சாந்தம்பட்டியிலுள்ள 63 K.V.A. *மின்மாற்றியை 110* K.V.A. *மின்மாற்றியாகத் திறன் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விடையளிப்பதற்கு முன்பாக, கேள்வியிலே பிழையிருக்கிறது. கேள்வியைத் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். "புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை மின்சாரத் துறை அலுவலகத்திற்குட்பட்ட சாந்தம்பட்டி பகுதியில் 63 K.V.A. *திறனுடைய மின்மாற்றியை, 110* K.V.A. *திறனுடைய மின்மாற்றியாகத் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? ஆம் எனில், எப்போது?" என்று கேட்டிருக்கிறார். 110* K.V.A. *திறனுடைய மின்மாற்றிகள் என்பது நடைமுறையில் இல்லை. 100* K.V.A. *என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். துணை மின் நிலையத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, 110 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையம் என்றுதான் குறிப்பிடுவார்கள். விநியோக மின்மாற்றியைக் குறிப்பிடுகின்றபோது, 100* K.V.A. *என்ற அளவிலேதான் இருக்கும், 110* K.V.A.. *மின்மாற்றி என்று வராது. 63, 100, 200, 250, 500* K.V.A. *அளவிலேதான் மின்மாற்றிகள் இயங்குகின்றன. ஆகவே, மேற்படி திருத்தத்தைக் கேள்வியிலே சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-15

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை மின்சாரப் பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட சாந்தம்பட்டி கிராமத்திற்கு, சூரக்காடு SS No. 10, 63 K.V.A. மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. சாந்தம்பட்டி கிராமத்தின் மொத்த மின் பளு 100.05 கிலோ வாட் ஆகும். மேற்கண்ட மின்மாற்றியின் மின் பளு அதிகமாக இருந்ததை கருத்திற்கொண்டு, 63 K.V.A. திறனுடைய மின்மாற்றியினை 100 K.V.A. திறனுடைய மின்மாற்றியாகத் தரம் உயர்த்தி, 21-1-2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்பொழுது, அங்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே எங்களது கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த, நாளும் நாளும் எங்களுக்கு நிரந்தர வழிகாட்டும் ஒளிவிளக்கு, எங்கள் இல்லத்துத் திருவிளக்கு, அறிவுப் பல்கலைக்கழகம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என் சார்பாகவும், புதுக்கோட்டை மக்களின் சார்பாகவும் நன்றியைச் சொல்லி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு விவசாயிகளும், பொதுமக்களும் சேர்ந்து 3-1-2011-ல் ஒரு ஏக்கர், 65 சென்ட் நிலத்தை விலைக்கு வாங்கி, மின் பகிர்மான மேற்பார்வைப் பொறியாளர், திருப்பத்தூர் அவர்கள் பெயருக்குப் பதிவு செய்துள்ளனர். ஆனால், மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் பணிகள் தொடங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

2014 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர் விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குடியாத்தம் பகுதியிலே ஏற்கெனவே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குப் பொதுமக்கள் நிலம் வழங்கியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மகிழ்ச்சி. அவ்வாறு இருக்குமாயின், மூன்றாண்டுக் காலம் கால தாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏன் மூன்றாண்டுக் காலம் கால தாமதம் ஆகிறது என்பது தெரியவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், அதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, ஏதாவது பிரச்சினை இருந்தால், அதனை முடிவுக்குக் கொண்டு வந்து, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 317, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

317—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***42419—திரு. சு. ரவி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தக்கோலம் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.